www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

**பகுதி I**

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** "உண்மை நிலையினைப் புலனுணர்விற்கு ஏற்றவகையில் அளிப்பதே கலை" எனக் கூறிய மேலைத்தேயக் கோட்பாட்டாளர்
(1) குரோசே ஆவார். (2) ஹெகல் ஆவார்.
(3) எரிக் நியூட்டன் ஆவார். (4) பியெட்ஸ்லி ஆவார்.
(5) வில்லியம் வேட்ஸ்வேத் ஆவார். (......)

**2.** கலை பற்றிய அறிஞர் அரவிந்தர் கருத்து
(1) அழகைக் கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதும் கலை.
(2) கலை என்பது உணர்வின் வெளிப்பாடு.
(3) மனிதனது உள்ளத்தை தன்வசமாக்கி நிரப்பி அவ்வளவோடு நில்லாமல் வெளிப்படுத்தும் ஆற்றலே கலை.
(4) தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை.
(5) மனித உணர்வுகளின் வெளிப்பாடே கலை. (......)

**3.** மேல்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலைகள் பற்றிய **பொருந்தாக்** கூற்று
(1) பார்ப்போர் முன்னிலையில் ஆற்றுகை செய்யப்படும்.
(2) ஆற்றுவோர் இன்றி ஆற்றுகைக் கலைகள் இல்லை.
(3) பாடல், இசை, ஒலிகள், அசைவுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
(4) கரு, கதைப்பின்னல், மோதுகை என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.
(5) பார்ப்போரின் நேரடித் துலங்கலிற்கு உட்பட்டிருக்கும். (......)

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**4.** மேல்வருவனவற்றுள் 'பலே' பற்றிய சரியான கூற்று
(1) 19 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றியது.
(2) நாட்டிய நாடகம் எனவும் இதனை அழைப்பர்.
(3) இசைக்கேற்ப உடலைப் பலவாறு பயன்படுத்தி ஆடப்படுவதாகும்.
(4) நடிகர் இசையில் தேர்ந்தவராகக் காணப்படுவார்.
(5) குறியீட்டுப் பாங்கான கைப்பொருட்கள் பயன்படுத்தப்படும். (......)

**5.** நாடக எழுத்துருவுடன் தொடர்புடைய மேல்வரும் கூற்றுகளைக் கருதுக.
அ - இலக்கியமாக இருப்பதோடு நடிகரால் உயிரூட்டப்படும்போது ஆற்றுகையாக மாறும்.
ஆ - வார்த்தைகளின் கலையன்று. வார்த்தைகளைப் பயன்படுத்தும் ஒரு கலையாகும்.
இ - நடிப்பதற்காகவே எழுதப்படுவது.
ஈ - கரு, கதைப்பின்னல், மோதுகை என்பனவற்றைக் கொண்டிருக்கும்.
உ - வாசிக்கும்போது ஏற்படும் ரசனையே அதனைப் பார்க்கும்போதும் ஏற்படும்.
மேற்குறிப்பிட்டவற்றுள் நாடக எழுத்துரு பற்றிய சரியான கூற்றுகளைக் கொண்ட தொகுதி யாது?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, ஈ, உ (4) ஆ, ஈ, உ (5) இ, ஈ, உ (......)

**6.** கிரேக்க அரங்க மரபில் வழங்கப்படும் 'தெஸ்பிஸின் வண்டி' என்பதன் கருத்து
(1) கோரசின் தொடர்ச்சியாகும்.
(2) நடிப்பு வரலாற்றுத் தொடர்ச்சியாகும்.
(3) அரங்க வரலாற்றுத் தொடர்ச்சியாகும்.
(4) வண்டிகள் செல்லும் பாதைத் தொடர்ச்சியாகும்.
(5) அரங்கக் கட்டடங்களின் தொடர்ச்சியாகும். (......)

**7.** மேல்வருவனவற்றுள் நாடகத் தயாரிப்புடன் தொடர்புடைய கூற்று **அல்லாதது**
(1) எழுத்துருவை உயிரோட்டமான ஒரு கலையாக மேடையில் படைத்தல்
(2) நாடகத் தயாரிப்புத் தொடர்பாக அடிப்படைப் பொறுப்பை வகித்தல்
(3) நிதி தொடர்பான செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருத்தல்
(4) விளம்பரம் செய்தல், நெறியாளரைத் தெரிவுசெய்தல் போன்ற பணிகளைச் செய்தல்
(5) நாடக ஆற்றுகை தொடர்பான அனைத்து விடயங்களையும் ஒழுங்கமைத்தல் (......)

**8.** கிரேக்க அரங்கில் காணப்படும் ஆடுகளம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) பலிபீடம் (Alter) (2) ஓர்கஸ்ரா (Orchestra)
(3) ஸ்கெனே (skenea) (4) பெரியக்ரோய் (Periactoi)
(5) எக்கிக் கிளேமா (Ekky klema) (......)

**9.** மேல்வருவனவற்றுள் கிரேக்க புதிய மகிழ்நெறி நாடக மரபிற்குரிய பண்புகளிலொன்று
(1) சமகாலத்து அரசியல்வாதிகளையும் அரசியல் கொள்கைகளையும் விமர்சித்தல்
(2) கற்பனை விடயங்களும் சமகால விடயங்களும் நாளாந்த நிகழ்ச்சியூடாகக் கூறப்படுதல்
(3) மத்தியதர வர்க்கத்தினரது அன்றாட விடயங்கள் யதார்த்தப் பண்புடன் நின்று பேசப்படுதல்
(4) சமகால மக்களின் குறைகளைக் கண்டித்து முற்பட்டவரின் உயர்ந்தப் பண்புகளைப் போற்றுதல்
(5) கோரசின் பாத்திரப் பண்பு, நாடகங்களின் தலைப்பாக அமைதல் (......)

**10.** மேல்வரும் நாடகக் கட்டமைப்புத் தொடர்பான விடயங்களைக் கருதுக.
அ - பாயிரம் ஆ - பிரவேசித்தல் இ - இசைப்பா
ஈ - இசைப்பா முகாரி உ - வெளியேறுகை
மேற்குறிப்பிட்டவற்றுள் மகிழ்நெறி நாடகக் கட்டமைப்புடன் தொடர்புடைய தொகுதி
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) அ, இ, உ (4) ஆ, இ, ஈ (5) இ, ஈ, உ (......)

**11.** அரிஸ்ரோட்டில் கூறும் கதைப்பின்னல்களில் 'நிறைகதைப்பின்னல்' கொண்டிருக்கும் இரு கூறுகள்
(1) விதி, சாபம் (2) எதிர்த்திருப்பம், தெளிவு (3) துன்பம், துயரம்
(4) சிக்கற்பாடு, மோதுகை (5) கட்டவிழ்ப்பு, உச்சக்கட்டம் (......)

**12.** மேல்வருவோருள் மனோரதியவாதத்துடன் **தொடர்பற்றவர்**
(1) அலெக்ஸாண்டர் டூமா (2) ஷில்லர் (3) எமிலிசோலா
(4) கதே (5) லெங்கின் ஷலாரிட்ஸ் (......)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**13.** மேல்வரும் கூற்றுகளைக் கவனிக்க.

அ - ஆடலும் பாடலும் முக்கியம் பெறுதல்
ஆ - அதிகளவு உணர்ச்சிகளைக் கொண்டு நடித்தல்
இ - எடுத்துரைப்பு முறையில் அறிமுகம் செய்தல்
ஈ - மிகைப்படுத்தப்பட்ட அசைவுகள், செயல்கள் இருத்தல்
உ - காட்சித்திரைகள் நீக்கம் செய்தல்

மேற்குறிப்பிட்டவற்றுள் மிகைப்பாட்டுவாத நாடக மரபுடன் தொடர்புபட்ட கூற்றுகளைக் கொண்ட தொகுதி

(1) அ, ஆ, ஈ (2) அ, இ, உ (3) அ, ஈ, உ (4) ஆ, ஈ, உ (5) இ, ஈ, உ (......)

**14.** வடமொழி நாடகத்தின் கதைப்பின்னல் 'அர்த்தப் பிரகிருதிகள்' என அழைக்கப்படும். அவற்றுள் 'பதகா' என அழைக்கப்படுவது

(1) தலைவன் தன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் தடைகளை எதிர்கொள்வது ஆகும்.
(2) தலைவனின் நோக்கம் வெற்றிபெற ஒருவர் துணைபுரிவதாக கற்பனை செய்யப்படும் வரலாறு ஆகும்.
(3) தனக்குப் பயன் ஏதும் இன்றி கற்பனை செய்யப்படும் வரலாறு ஆகும்.
(4) நாடகப் பொருளுக்கு விதை போன்றது ஆகும்.
(5) பலனை அடையப் பயன்படுவது ஆகும். (......)

**15.** வடமொழி நாடகக் கட்டமைப்பில் 'நியதாப்தி' எனப்படுவது,

(1) நாடகச் செயலின் நோக்கம் என்பதாகும்.
(2) விரும்பிய பொருளை அடைய கதாநாயகன் முயலுதல் என்பதாகும்.
(3) நோக்கம் நிறைவேறிப் பயனடைதல் என்பதாகும்.
(4) நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நம்பிக்கை என்பதாகும்.
(5) எதிர்ப்படும் துன்பங்களை நீக்குவதால் குறிக்கோள் நிறைவேறுதல் என்பதாகும். (......)

**16.** சமஸ்கிருத அரங்கில் குறிப்பிடப்படும் 'திரியஸ்ட அரங்கு' என்பது,

(1) வட்ட அரங்கு ஆகும். (2) செவ்வக அரங்கு ஆகும். (3) சதுர அரங்கு ஆகும்.
(4) முக்கோண அரங்கு ஆகும். (5) எண்பக்க அரங்கு ஆகும். (......)

**17.** மேல்வரும் கூற்றுகளுள் 'நாட்டிய தர்மி' பற்றிய சரியான கூற்று

(1) உலக இயற்கையைப் பின்பற்றுவது என்பதாகும்.
(2) நடைமுறை வாழ்வியலை ஒத்திருப்பது என்பதாகும்.
(3) இயல்பான அபிநயங்களை வெளிப்படுத்துவது என்பதாகும்.
(4) லலித அங்க அசைவுகள் கொண்டது என்பதாகும்.
(5) போலித்தன்மை அற்றது என்பதாகும். (......)

**18.** சமஸ்கிருத நாடகத்தில் 'ரசக் கோட்பாடு' பற்றிக் குறிப்பிடப்படும் கருத்துக்களில் **பொருந்தாக்** கூற்று

(1) 'ரஸ' எனும் சமஸ்கிருத வினையடியாய்ப் பிறந்தது.
(2) பார்ப்போர் நிலைப்பட்ட உணர்ச்சித் தோற்றுகை.
(3) ஒன்பது வகை ரசங்களை முன்வைக்கிறது.
(4) ரச அனுபவத்தை ஏற்படுத்துவது பாவம் ஆகும்.
(5) விபாவ அனுபாவ வியபிச்சாரி பாவ சேர்க்கையால் இடம்பெறுவதாகும். (......)

**19.** 'எந்தையும் தாயும்' நாடகத்தில் வரும் ஐயாத்துரை பாத்திரம்,

(1) சோகமும் அவலமும் கொண்டது. (2) காத்திரமும் ஹாஸ்யமும் கொண்டது.
(3) பதற்றமும் அவலமும் கொண்டது. (4) அமைதியும் சோகமும் கொண்டது.
(5) அடக்கமும் பதற்றமும் கொண்டது. (......)

**20.** மேல்வரும் வடிவங்களுள் பிரதானமாக உடல், குரல் இரண்டையும் நடிகர் ஊடாக முதன்மைப்படுத்துவன

(1) பலே, கதகளி என்பனவாகும். (2) இசைநாடகம், ஒபேறா என்பனவாகும்.
(3) ஊம நாடகம், நடனம் என்பனவாகும். (4) கூத்து, நாடகம் என்பனவாகும்.
(5) வாசகப்பா, பேசாப் பாவனை நாடகம் என்பனவாகும். (......)

**21.** "புராதன மனிதனுடைய சமயச் சடங்கிலேதான் நாடகத்தின் மூலவேர் உள்ளது." எனக் கூறியவர்,

(1) கீத் ஆவார். (2) ஜோன் ஹரிசன் ஆவார் (3) கா. சிவத்தம்பி ஆவார்
(4) நிட்ஜ்வே ஆவார். (5) ஏ.ஜே. குணவர்த்தன ஆவார் (......)

**22.** மேல்வருவோருள் தனது ஆற்றுகைக்கான மூலகங்களை விவிலியப் பாடல்களிலிருந்தும் பொதுவணக்கப் பாடல்களிலிருந்தும் பெற்றுக்கொண்டவர்,

(1) அன்ரனியோ ஆர்த்தோ ஆவார். (2) பீற்றர் புறூக் ஆவார். (3) குறொட்டோவ்ஸ்கி ஆவார்.
(4) ஒகஸ்தாப் போல் ஆவார். (5) றிச்சேட் செக்னர் ஆவார். (......)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**23.** மேல்வருவனவற்றுள் பேய்மகளிரை மகிழ்விக்கச் செய்யப்பட்ட தமிழக சடங்காட்ட முறைமை,
(1) களவேள்வி ஆகும். (2) வெறியாட்டு ஆகும். (3) தை நீராடல் ஆகும்.
(4) வாடாவள்ளி ஆகும். (5) குன்றக் குரவை ஆகும். (……)

**24.** 'ஆடுகளம்' என ஆற்றுகை வெளியைக் குறிப்பிடும் தமிழ் இலக்கியம்,
(1) தொல்காப்பியம் ஆகும். (2) சிலப்பதிகாரம் ஆகும். (3) திருக்குறள் ஆகும்.
(4) கலித்தொகை ஆகும். (5) பரிபாடல் ஆகும். (……)

**25.** கோடியர் தமது ஆற்றுகையின்போது பயன்படுத்திய வாத்தியங்கள்,
(1) கோடு, முழவு என்பனவாகும். (2) முழவு, வயிர் என்பனவாகும்.
(3) வயிர், கிணை என்பனவாகும். (4) கிணை, முரசம் என்பனவாகும்.
(5) முரசம், யாழ் என்பனவாகும். (……)

**26.** சங்கரதாஸ் சுவாமிகள், இசை நாடக மரபில் சிறந்த கலைஞராக விளங்கியமைக்கான காரணங்களில் ஒன்றாகக் கருத **முடியாதது**
(1) நடிப்புத்திறன் (2) பாட்டியற்றும் திறன் (3) நிர்வாகத் திறன்
(4) சொல்லாடல் திறன் (5) பாடும் திறன் (……)

**27.** மேல்வருவனவற்றுள் தென்பாங்கு (மன்னார்) பற்றிய சரியான கூற்று
(1) மாதோட்டத்திற்குரியது.
(2) கடவுள் வாழ்த்து விருத்தத்தில் அமையும்.
(3) அரச பாத்திரம் செங்கோலுடன் வரும்.
(4) காட்சித்திரைகள் பயன்படுத்தப்படும்.
(5) கதைச் சுருக்கம் சபையோரால் செய்யப்படும். (……)

**28.** பாத்திர வரவுகளைத் தாமே பாடி வருவதாக / தம்மைத்தாமே அறிமுகம் செய்வதாக அமையும் மரபுவழி நாடகம்,
(1) வடமோடி ஆகும். (2) தென்மோடி ஆகும். (3) கோவலன் கூத்து ஆகும்.
(4) காத்தவராயன் கூத்து ஆகும். (5) வசந்தன் கூத்து ஆகும். (……)

**29.** மாசி மாதம் அமாவாசை கழித்து வரும் மூன்றாம் நாள் நிகழ்த்தப்படும் மலையக நாடக மரபு,
(1) காமன் கூத்து ஆகும். (2) அர்ச்சுனன் தபசு ஆகும். (3) பொன்னர் சங்கர் ஆகும்.
(4) வீரபத்திரர் ஆட்டம் ஆகும். (5) தப்பாட்டம் ஆகும். (……)

**30.** மேல்வருவனவற்றுள் இசை நாடகப் பாடல்களைப் பாடும்போது கோப வெளிப்பாட்டைக் காட்டும் ராகம்,
(1) முகாரி ஆகும். (2) சகானா ஆகும். (3) நீலாம்பரி ஆகும்.
(4) மோகனம் ஆகும். (5) சங்கராபரணம் ஆகும். (……)

**31.** படைப்பாளிக்கும் பார்ப்போருக்கும் இடையில் நேரடித் தொடர்பு **காணப்படாக்** கலைவடிவம்,
(1) கதாப்பிரசங்கம் ஆகும். (2) வில்லுப்பாட்டு ஆகும். (3) கதாகாலேட்சபம் ஆகும்.
(4) நடனம் ஆகும். (5) ஓவியம் ஆகும். (……)

**32.** "உறைந்து போன இசைக்கலையே கட்டடக் கலை" என அதன் சிறப்புப் பற்றிக் கூறியவர்,
(1) ஸ்லீகல் ஆவார். (2) மாசேதுங் ஆவார்.
(3) கோல்ரிட்சு செல்லிகு ஆவார். (4) வில்லியம் வேட்ஸ்வேத் ஆவார்.
(5) R.G. கொலிவூட் ஆவார். (……)

**33.** மேல்வருவனவற்றுள் 'பாடி நடித்தலையும் நடித்துப் பாடுதலையும்' கொண்டமைந்த ஆற்றுகை வடிவம்,
(1) கூத்து ஆகும். (2) பலே ஆகும். (3) இசைநாடகம் ஆகும்.
(4) நாட்டிய நாடகம் ஆகும். (5) கொமேடியா டெல்ஆட்டே ஆகும். (……)

**34.** அரங்கப் பண்பாட்டில் 'கரு' என அழைக்கப்படுவது பற்றிய **பொருந்தாக்** கூற்று
(1) எழுத்துருவின் மூலக்கூறுகளில் ஒன்று
(2) நாடகத்தின் பிரதான செய்தி
(3) நாடகத்தின் பேசுபொருள்
(4) நாடகச் சம்பவங்களின் நிரலொழுங்கு
(5) நாடகத் தொடக்கம் முதல் இறுதிவரை வியாபித்திருப்பது (……)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk




**35.** "பாடசாலை நாடகங்கள், பாடசாலை மாணவர்களையே பார்ப்போராகக் கொண்டிருக்கும்." இவர்களை,
(1) பொதுப் பார்ப்போர் என அழைப்பர்.
(2) இலக்குப் பார்ப்போர் என அழைப்பர்.
(3) பரீட்சார்த்தப் பார்ப்போர் என அழைப்பர்.
(4) கௌரவப் பார்ப்போர் என அழைப்பர்.
(5) வரையறுக்கப்பட்ட பார்ப்போர் என அழைப்பர். (……)

**36.** மேல்வருவனவற்றுள் 'கைவினைக் கலை' பற்றிய பொருத்தமான கூற்று
(1) மீளுருவாக்கம் செய்யமுடியாதது ஆகும். (2) அழகை முதன்மையாகக் கொண்டது ஆகும்.
(3) பிரதியீடு இல்லாதது ஆகும். (4) பயனை முதன்மையாகக் கொண்டது ஆகும்.
(5) படைப்பாக்கத்துடன் தொடர்பு கொண்டது ஆகும். (……)

**37.** மேலைத்தேய நாடகாசிரியர் இப்சன்
(1) இயற்பண்புவாத, யதார்த்தவாத நாடகங்களை எழுதினார்.
(2) யதார்த்த, யதார்த்த விரோத நாடகங்களை எழுதினார்.
(3) குறியீட்டு, காவிய நாடகங்களை எழுதினார்.
(4) காவிய, அபத்த நாடகங்களை எழுதினார்.
(5) மென்மை யதார்த்த, கற்பித நாடகங்களை எழுதினார். (……)

**38.** உலக அரங்கில் 'ஆற்றுகைக் கற்கைகள்' (Performance studies) என்கின்ற ஒரு கற்கை நெறிமுறைமையை உருவாக்கியவர்,
(1) அஸ்வகோஸ் ஆவார். (2) பாதர் சர்க்கார் ஆவார். (3) றிச்சேட் செக்னர் ஆவார்.
(4) ஒஸ்கார் புறொக்கற் ஆவார். (5) யூஜினோ பாபா ஆவார். (……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர் உருவாக்கிய அரங்க முறைமை,
(1) காவிய அரங்கு என்பதாகும்.
(2) குரூர அரங்கு என்பதாகும்.
(3) வறுமை அரங்கு என்பதாகும்.
(4) அபத்த அரங்கு என்பதாகும்.
(5) சூழல் அரங்கு என்பதாகும்.



(……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள பாத்திரத்திற்குரிய ஒப்பனை,
(1) யப்பானிய கபுக்கி மரபிற்குரியது.
(2) யப்பானிய நோ மரபிற்குரியது.
(3) சீன ஒபேறா மரபிற்குரியது.
(4) யப்பானிய புன்றக் மரபிற்குரியது.
(5) மலேசியா மயாங் மரபிற்குரியது.



(……)

* *

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

www.agaram.lk



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) 'நாடகம்', 'ஆற்றுகை' என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்தி விளக்குக.
(ii) நீர் ஆற்றுகையாளராகப் பங்குபற்றிய ஆற்றுகை நிகழ்ச்சி ஒன்றின் உருவாக்கப் படிமுறையினை விவரிக்குக.
(iii) ஆற்றுகைப் படிமுறையில் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் **ஐந்தினைப்** பட்டியலிடுக.
(5 × 3 = 15 புள்ளிகள்)

**2.** (i) நடிப்பு என்றால் என்ன?
(ii) ஸ்ரனிஸ்லவஸ்கியின் நடிப்பு எண்ணக்கருவிற்கும் பரதரின் நடிப்பு எண்ணக்கருவிற்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக.
(iii) அகத்திலிருந்து புறத்திற்கும் புறத்திலிருந்து அகத்திற்கும் செல்லும் நடிப்புப் பயணத்தில் உமது அனுபவத்தை விளக்குக.
(5 × 3 = 15 புள்ளிகள்)

**3.** (i) பண்பாட்டிற்கும் அரங்குக்கும் உள்ள தொடர்பை விளக்குக.
(ii) நீர் பங்குபற்றிய அரங்கொன்றின் மூலகங்கள் நீர் வாழும் பண்பாட்டிலிருந்து பெறப்பட்டமையை உதாரணங்களுடன் விளக்குக.
(iii) மேலே (ii) இல் நீர் பங்குபற்றியதாகக் குறிப்பிட்ட அரங்கு, பார்வையாளர் மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதனை விளக்குக. (5 × 3 = 15 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** "அரங்க வெளி என்பது வெறுமனே பௌதீக நிலைப்பட்ட அம்சமன்று" என்பதனை கிரேக்க, யப்பானிய நோ அரங்க வெளிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** ஈழத்து நவீன அரங்கப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை இனங்கண்டு, அம்மாற்றங்களில் வெளிப்பட்ட அரங்கக் கோட்பாடுகளை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) கைவினைக்கலை
(ii) படைப்பாக்கத்திறன்
(iii) வகிபாகச் சித்திரிப்பு
(iv) ரசக் கோட்பாடு
(v) சற்றயர் நாடக வகை
(5 × 3 = 15 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
இங்கே வேறாக்கவும்
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

agaram.lk

www.agaram.lk



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

✻ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

✻ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

**பகுதி I**

✻ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

✻ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** காத்தவராயன் கூத்துப் பாணியில் சாதி, தீண்டாமைப் பிரச்சினைகள் என்பனவற்றை எடுத்துப் பேசிய நாடகம்,
(1) பொறுத்தது போதும் ஆகும். (2) கடூழியம் ஆகும்.
(3) கோபுரவாசல் ஆகும். (4) கந்தன் கருணை ஆகும்.
(5) சக்தி பிறக்குது ஆகும். (......)

**2.** கூத்து மரபில் வந்து, கூத்து மரபினை நவீன நாடக மரபின் இன்றியமையாத ஒன்றாக ஆக்கியவரில் ஒருவர்
(1) க. பாலேந்திரா ஆவார். (2) நா. சுந்தரலிங்கம் ஆவார்.
(3) சி. மௌனகுரு ஆவார். (4) இ. சிவானந்தன் ஆவார்.
(5) சுஹைர்ஹமீத் ஆவார். (......)

**3.** 'உயிர்த்த மனிதரின் கூத்து' நாடகத்தினை எழுதியவர்,
(1) ம. சண்முகலிங்கம் ஆவார். (2) இ. முருகையன் ஆவார்.
(3) நா. சுந்தரலிங்கம் ஆவார். (4) மாவை நித்தியானந்தன் ஆவார்.
(5) து. உருத்திரமூர்த்தி ஆவார். (......)

**4.** பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் ஆற்றுகை செய்யப்பட்ட நாடகங்களுள் **உள்ளடங்காதது**
(1) உடையார் மிடுக்கு (2) குரங்குகள்
(3) சுந்தரம் எங்கே (4) இராவணேசன்
(5) ஐயா எலெக்சன் கேக்கிறார் (......)

**5.** 'அன்னை இட்ட தீ', 'வேள்வித் தீ' போன்ற உளமறி நாடகங்களின் ஆசிரியர்,
(1) எஸ். சிவயோகன் ஆவார். (2) க. சிதம்பரநாதன் ஆவார்.
(3) ம. சண்முகலிங்கம் ஆவார். (4) தயா சோமசுந்தரம் ஆவார்.
(5) ம. கோகிலா ஆவார். (......)

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**6.** சிங்களம க்களின் தொவில், ஒரு
(1) கருவளச் சடங்கு ஆகும்.
(2) பேயோட்டும் சடங்கு ஆகும்.
(3) மழை வேண்டிச் செய்யப்படும் சடங்கு ஆகும்.
(4) சாந்திச் சடங்கு ஆகும்.
(5) கேளிக்கைச் சடங்கு ஆகும். (......)

**7.** கிரேக்க அரங்க மரபில் முக்கூட்டு நாடக முறையில் நாடகங்களைப் படைத்தவர்
(1) ஈஸ்கிலஸ் (2) சோபோகிளிஸ் (3) யூரிப்பிடிஸ்
(4) அரிஸ்ரோபேன்ஸ் (5) மெனான்டர் (......)

**8.** சிங்கள நாடகம மரபில் 'பொத்தே குரு' போன்று சமஸ்கிருத நாடகத்தில் வருபவர்
(1) பபூன் (2) வெசமுனி (3) சூத்திரதாரி
(4) விதூசகன் (5) கட்டியக்காரன் (......)

**9.** ஆற்றுகைக் கலைகளான நடனம், வில்லுப்பாட்டு ஆகியவற்றுடன் தொடர்புடைய கலைஞர்கள்
(1) தைரியநாதன், பாலமுரளிகிருஸ்ணா (2) ருக்மணி அருண்டேல், கண்ணன்
(3) சின்னமணி, செல்லையா அண்ணாவியார் (4) பத்மா சுப்ரமணியம், பிரான்சிஸ் ஜெனம்
(5) சின்னமணி, ருக்மணி அருண்டேல் (......)

**10.** கிரேக்க நாடகங்களான அகமெம்னன், ஹெலன் போன்ற நாடகங்களின் ஆசிரியர்கள்
(1) சோபோகிளிஸ், ஈஸ்கிலஸ் ஆகியோராவர். (2) யூரிப்பிடிஸ், அரிஸ்ரோபேன்ஸ் ஆகியோராவர்.
(3) மெனான்டர், சோபோகிளிஸ் ஆகியோராவர். (4) ஈஸ்கிலஸ், யூரிப்பிடிஸ் ஆகியோராவர்.
(5) தெஸ்பிஸ், அரியோன் ஆகியோராவர். (......)

**11.** அபிக்ஞான சாகுந்தலத்தில் "நேற்று எங்களை விட்டுப்பிரிந்து வேட்டை ஆடுகையில் ஆச்சிரமத்துள் பிரவேசித்த அரசர் கண்ணில் சகுந்தலை என்ற தாபக்கன்னி தென்பட்டுவிட்டாள்." எனக் கூறும் பாத்திரம்
(1) பிரியம்வதை (2) அனுசூயை (3) விதூசகன்
(4) செம்படவன் (5) வாயிற்காவலன் (......)

**12.** ஆச்சரியம் என்பதற்கு சமமான உணர்வு
(1) ஹாஸ்யம் (2) ரௌத்தரம் (3) வீஸ்மயம் (4) கருணை (5) பயம் (......)

**13.** நால்வகை வர்ணத்தாருக்குரிய தூண்களில் சத்திரியருக்கு ஒதுக்கப்பட்ட நிறம்
(1) வெள்ளை (2) கறுப்பு (3) பச்சை (4) சிவப்பு (5) மஞ்சள் (......)

**14.** 'யுத்தம் வந்தால் பகைமைகள் பரவும், குரோதம் கௌவும், கொலைத்தொழில் நிகழும்.' இக்கூற்றிற்குரிய இராவணேசன் நாடகப் பாத்திரம்
(1) இந்திரஜித் (2) கும்பகர்ணன் (3) மண்டோதரி
(4) இராமன் (5) இலக்குமணன் (......)

**15.** லோட்சேக்ஸ் மனிங்கன் பிரபு உலக நாடக வரலாற்றின்
(1) முதலாவது நடிகர் ஆவார். (2) முதலாவது நாடகாசிரியர் ஆவார்.
(3) முதலாவது நெறியாளர் ஆவார். (4) முதலாவது ஒளியமைப்பாளர் ஆவார்.
(5) முதலாவது காட்சிவிதானிப்பாளர் ஆவார். (......)

**16.** இலங்கையில் கரையோர தாழ்நாட்டுப் பிரதேசத்தில் ஆற்றுகை செய்யப்படும் சிங்கள நாடக வடிவம்
(1) கோலம (2) சொக்கரி (3) நாடகம (4) நூர்த்தி (5) தொவில் (......)

**17.** இலங்கையில் வெளிவரும் அரங்கு பற்றிய சஞ்சிகைகள்
(1) ஜீவநதி, மகுடம் (2) அரங்கம், ஞானம் (3) மல்லிகை, களரி
(4) மெய்ப்பாடு, தீபம் (5) கூத்தரங்கம், ஆற்றுகை (......)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**18.** புலம்பெயர் நாடுகளில் தற்போதும் பாரம்பரிய அரங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருபவர்களிலொருவர்
(1) க. பாலேந்திரா (2) மாவை நித்தியானந்தன் (3) அ. தாசீசியஸ்
(4) அ. ரவி (5) இ. பாலசுந்தரம் (……)

**19.** மேல்வரும் கூற்றுகளை அவதானித்து விடையளிக்குக.
A - அப்பா பெரியய்யாவுக்கு சாப்பாடு
B - சாப்பாடோ, பெரியய்யாவுக்கு சாப்பாடு வந்திட்டுது........
A - என்னப்பா சொல்றியள்
'எந்தையும் தாயும்' நாடகத்தில் வரும் உரையாடல்களைப் பேசும் A , B எனும் பாத்திரங்கள் முறையே
(1) கண்ணன், ஐயாத்துரை (2) மகேஸ்வரி, சங்கரப்பிள்ளை (3) வசந்தி, ஐயாத்துரை
(4) செல்வரத்தினம், மகேஸ்வரி (5) கண்ணன், வசந்தி (……)

**20.** 'பிரியதர்சிக்கா', 'நாகானந்தம்' போன்ற நாடகங்களை வடமொழியில் எழுதிய இந்திய நாடகாசிரியர்
(1) காளிதாசர் (2) சூத்திரகர் (3) பாசர்
(4) ஸ்ரீஹர்சர் (5) பவபூதி (……)

**21.** 'சன்னியக்கும'வின் செல்வாக்கினைப் பெற்ற சிங்கள நாடக வடிவம்
(1) சொக்கரி (2) ரித்தியாக்கம
(3) கோலம (4) கொஹொம்பகங்காரிய
(5) பகன்மடுவ (……)

**22.** சொக்கரியின் ஆற்றுகை வெளி
(1) ஆடுகளம் ஆகும். (2) தானாயம்பல ஆகும் (3) கறளிய ஆகும்.
(4) களத்துமேடு ஆகும். (5) வட்டக்களரி ஆகும். (……)

**23.** சிங்கள யதார்த்தவாத நாடகங்களைச் சமூக யதார்த்தம் தேடும் கலை ஊடகமாக மாற்றியமைத்தவர்,
(1) ஜோன் டி சில்வா ஆவார். (2) ஹென்றி ஜயசேன ஆவார்.
(3) சுகதபால டி சில்வா ஆவார். (4) குணசேன கலப்பதி ஆவார்.
(5) ஆர். ஆர். சமரக்கோன் ஆவார். (……)

**24.** 'யூயென்' எனும் அழகியல் அனுபவத்தைத் தரும் யப்பானிய நாடகம்,
(1) கபுக்கி ஆகும். (2) புன்றக்கு ஆகும். (3) கொவாக்கா ஆகும்.
(4) நோ ஆகும். (5) கியோயின் ஆகும். (……)

**25.** மீலான்.ஃபாங் என்பவர்,
(1) யாத்ரா அரங்கின் நடிகர் ஆவார்.
(2) சீன அரங்கின் நடிகர் ஆவார்.
(3) கொமெடியா டெல் ஆட்டேயின் நடிகர் ஆவார்.
(4) கபுக்கி அரங்கின் நடிகர் ஆவார்.
(5) இத்தாலிய பலேயின் நடிகர் ஆவார். (……)

**26.** "இதுவோ கடுங்கோடை, வெய்யிலினால் அல்ல, வெளியார் அரசாட்சி செய்யும் கொடுமைச் சிறப்பே அதுதான்" இது கோடை நாடக சொல்லாடல் ஆகும். இச்சொல்லாடலிற்குரிய பாத்திரம்
(1) மாணிக்கம் (2) பஞ்சையர் (3) செல்லம்
(4) சோமு (5) முருகப்பு (……)

**27.** 'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' எனும் நூலின் ஆசிரியர்,
(1) சி. மௌனகுரு ஆவார். (2) க. சொக்கலிங்கம் ஆவார்.
(3) செ. சுந்தரம்பிள்ளை ஆவார். (4) சு. வித்தியானந்தன் ஆவார்.
(5) கா. சிவத்தம்பி ஆவார். (……)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**28.** தமிழ்நாட்டில் கதைகூறும் பாங்கில் நாடகங்கள் தோற்றம் பெற்ற காலம்
(1) சங்க காலம் (2) வீரயுக காலம் (3) பல்லவ காலம்
(4) சோழர் காலம் (5) விஜய நகர நாயக்கர் காலம் (......)

**29.** சிலப்பதிகாரம், மாதவியின் அரங்கு பற்றிக் கூறும் அளவுகோல்
(1) 7 கோல் உயரம் 8 கோல் அகலம் 1 கோல் நீளம்
(2) 7 கோல் அகலம் 8 கோல் உயரம் 1 கோல் நீளம்
(3) 7 கோல் அகலம் 8 கோல் நீளம் 1 கோல் உயரம்
(4) 8 கோல் அகலம் 7 கோல் நீளம் 1 கோல் உயரம்
(5) 8 கோல் உயரம் 7 கோல் நீளம் 1 கோல் அகலம் (......)

**30.** இந்திய நாடகம் சமயத் தொடர்புடையது. இதற்கான மூலவேர்களை இருக்கு வேதத்தில் காணலாம் எனக் கூறியவர்
(1) கீத் (2) அஸ்வகோஸ் (3) பக்தவத்சல பாரதி
(4) இராசமாணிக்கனார் (5) ஜோன் ஹறீசன் (......)

**31.** பின்வருவோருள் ஊம நாடக மரபுடன் **தொடர்புபடாதவர்**
(1) ஒகஸ்டஸ் (Augustas) (2) யக்குஸ் கோப்பா (Jacques capea)
(3) மார்சல் மாஸ்யூ (marcel marceau) (4) சார்லி சப்ளின் (charlie chaplin)
(5) ஒகஸ்ரோ கொம்ரோ (Augustas comte) (......)

**32.** காளிதாசரது அபிக்ஞான சாகுந்தலத்தின் மூலக்கதை பெறப்பட்டது,
(1) இராமாயணத்திலிருந்து ஆகும். (2) மகாபாரதத்திலிருந்து ஆகும்.
(3) சிவபுராணத்திலிருந்து ஆகும். (4) கந்தபுராணத்திலிருந்து ஆகும்.
(5) விவிலியக் கதையிலிருந்து ஆகும். (......)

**33.** சிங்கள நாடகம மேடையேற்றப்படும் நேரம்
(1) பகல் (2) காலை (3) மதியம் (4) மாலை (5) இரவு (......)

**34.** பேட்டோல்ட் பிறெக்டின் நாடகங்களுள் இலங்கையில் முதலில் மேடையேற்றப்பட்ட நாடகம்
(1) சோக் சேக்கிர்ள் (Chalk circle)
(2) மத கரேஜ் (mother courage)
(3) த குட் வுமன் ஒவ் செற்சுவன் (The Good Women of Setzuan)
(4) த திரீ பென்னி ஒபேறா (The Three Penny Opera)
(5) த லைவ் ஒவ் கலிலியோ (The life of Galileo) (......)

**35.** 'எழிற்கை' என்பது நடனமாடும் பெண்ணினது
(1) பாவங்களைச் சித்திரிக்கும் கை ஆகும்.
(2) பாவங்களைக் காட்டாத கை ஆகும்.
(3) தாளமிடும் கை ஆகும்.
(4) நடனத்தின் ஆட்டச் செம்மையைச் சித்திரிக்கும் கை ஆகும்.
(5) அசைவைக் கட்டுப்படுத்தும் கை ஆகும். (......)

**36.** மன்னன் லியர் நாடகத்தில் வரும் 'லியர் மன்னன்' என்பவர்,
(1) டென்மார்க்கின் அரசன் ஆவார். (2) கொட்லாந்தின் அரசன் ஆவார்.
(3) பிரான்சிய அரசன் ஆவார். (4) பிரிட்டிஷ் மன்னன் ஆவார்.
(5) இத்தாலிய ரோம் நகரப் பேரரசு ஆவார். (......)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள நாடகாசிரியர் எந்த நாட்டுக்குரியவர்


(1) ஜேர்மனி
(2) ருஸ்யா
(3) இங்கிலாந்து
(4) நோர்வே
(5) ஐரிஷ்



(……)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள வேடமுகம் குறிக்கும் நாடக மரபு


(1) கேரள கதகளி
(2) சீன ஒபேறா
(3) யப்பானிய நோ
(4) யப்பானிய கியோஜென்
(5) மலேசிய மயாங்



(……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்க வெளியில் ஆற்றப்படுவது

(1) இசைநாடகம்
(2) கூத்து
(3) வில்லுப்பாட்டு
(4) வாசகப்பா
(5) நவீன நாடகம்



(……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் உருவாக்கப் பெற்ற சிறந்த நாடகம்

(1) இராமாயணம்
(2) மகா அலெக்ஸாண்டர்
(3) மகாபாரதம்
(4) அன்னப்பாட்டு
(5) மயானபூமி



(……)

* *

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** "ஈடிப்பஸ் மன்னன் என்னும் கிரேக்கத் திறஜெடி, விதியினால் துரத்தப்படும் நாயகன் ஒருவனின் அவலமாக அமைந்துள்ளது."

(i) கிரேக்கத் திறஜெடியின் முக்கிய பண்புகள் **ஐந்தினைத்** தருக. (05 புள்ளிகள்)

(ii) 'ஈடிப்பஸ் மன்னன்' நாடகத்தில் திறஜெடியின் பண்புகள் கட்டமைக்கப்பட்டுள்ள முறைமையினை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**2.** "இராவணேசன் நாடகம் வியாக்கியானங்கள் பலவற்றிற்கு இடமளிக்கக்கூடிய, எக்காலத்துக்கும் பொருந்தி நிற்கக்கூடிய கதையினைக் கொண்டமைந்ததாக உள்ளது."

(i) இராவணேசன் நாடகத்தின் கரு, கதை, கட்டமைப்பு என்பவற்றைச் சுருக்கமாகத் தருக.(5 புள்ளிகள்)

(ii) இராவணேசன் நாடகத்தில் மண்டோதரி பாத்திரம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள முறை பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

**3.** "மொழி, பாத்திரவாக்கம், அவலப்பண்பு என்பவற்றைக் கையாளும் முறைமையில் சேக்ஸ்பியர் கைதேர்ந்தவராக உள்ளார்."

(i) கிங்லியர் நாடகத்தில் பாத்திரங்களுக்கிடையேயான அவலமோதுகை வெளிப்படும் சந்தர்ப்பங்கள் **ஐந்தினைத்** தருக. (05 புள்ளிகள்)

(ii) கிங்லியர் பாத்திரம் சித்தப்பிரமைக்கு உட்பட்ட பின்னர் சித்திரிக்கப்பட்டுள்ள முறைமையினை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** மேனாட்டு அரங்க வரலாற்றில் அரிஸ்ரோட்டிலும் ஒகஸ்தாபோலும் எதிரெதிர்க் கோட்பாடுகளை முன்வைப்பவர்களாக உள்ளனர். கதாசிஸ் - எதிர் கதாசிஸ் கோட்பாட்டின் அடிப்படையில் இக்கூற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** "1970 களுக்குப் பின் ஈழத்துத் தமிழ் அரங்கின் வளர்ச்சியில் அரங்க நிறுவனங்களின் பங்களிப்பு மகத்தான ஒன்றாகும்." நீர் விரும்பிய மூன்று அரங்க நிறுவனங்களைக் குறிப்பிட்டு, அவற்றை ஸ்தாபித்தவர்கள், அவற்றின் அரங்குசார் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பனவற்றினை விவாதிக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) தமிழகத் தெருக்கூத்து

(ii) வசந்தன் கூத்து

(iii) நாடகம

(iv) பலே

(v) வேட்டுவ வரி

(5 × 3 = 15 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!

இங்கே வெறாக்கவும்

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

www.agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk